**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.207/2008**

**வா.சா. 1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | சுப்பையா |
| தகப்பனார் பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| வயது | : | 58 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| மாவட்டம் | : | |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 05.06.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**3 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

பாலகிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் 08.05.2008ம் வருடம் ஆகும். பாலகிருஷ்ணனின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 18.04.2011ம் தேதியில் ஏற்பட்ட 3 கிரைய பத்திரங்கள் மூலம் சந்திராரெட்டி என்பவரிடமிருந்து அழகர்சாமி கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. 3 முதல் 9 பிரதிவாதிகள் அழகர்சாமி அவர்களிடமிருந்து 03.11.2014ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்று வருவாய் துறையில் பட்டா பெற்று சுவாதீனத்தில் அனுபவித்து இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் பெறுவதற்கு முன்பே அழகர்சாமி பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல. நான் பத்திர எழுத்தாளர் என்பதால் தாவா சொத்து சம்மந்தமாக அனைத்து விபரங்களும் தெரிந்தும் தாவா சொத்துக்களுக்கும், எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதால்தான் அழகர்சாமி பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததின் பெயரில் எவ்வித நடவடிக்கையும் நான்

மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யும் பொழுது என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் 11ல் 3 பங்கு பிரித்து கொடுக்கும்படி தாவா வழக்கு தாக்கல் செய்தேன். என்னுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்த மற்ற வாதிகள் தாவா வழக்கு பொய்யான வழக்கு என்பதால் இந்த வழக்கை நடத்த முன் வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது இன்றைய தேதி வரை 3 முதல் 9 பிரதிவாதிகள் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. 16.06.1988ம் தேதியிட்ட கிரைய பத்திரமான வா.சா.2 ஆவணத்தினை செல்லத்தக்கதல்ல என்று சட்ட காலவரம்புக்குள் தாவா வழக்கு தாக்கல் செய்யாமல் உள்ளதால் இந்த வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

G ASHOK PRASATH

Digitally signed by G ASHOK PRASATH
Date: 2024.06.05 17:06:32 +0530

**Principal District Munsif**
**Vedasandur**